வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்,

ந.க.எண். 658/அ1/2024 நாள்: 21.02.2024

-----

பொருள் : தமிழ்நாடு பள்ளிக் கல்வி – சார்நிலைப் பணி 01.01.2024 நிலவரப்படி தகுதியுள்ள ஆசிரியரல்லாத பணியாளர்கள் – பணிமாறுதல் மூலம் கலை ஆசிரியராக பதவி உயர்வளிக்கதக்க தகுதி வாய்ந்தவர்களின் தற்காலிக (Temporary) உத்தேச பெயர் பட்டியல் தயார் செய்யப்பட்டு அனுப்பி வைத்தல் – அதில் சேர்க்கை, நீக்கம் திருத்தம் செய்து மீள அனுப்பக் கோருதல் – சார்ந்து

பார்வை : சென்னை, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.31104/சி5/இ4/ 2022 நாள்.20.02.2024

-----

பார்வையில் காணும் செயல்முறைகளின்படி 01.01.2024 நிலவரப்படி தகுதியுள்ள ஆசிரியரல்லாத பணியாளர்கள் பணிமாறுதல் மூலம் கலை ஆசிரியராக பதவி உயர்வு வழங்க தக்க வகையில் தற்காலிக தகுதி வாய்ந்தோர் உத்தேச பெயர் பட்டியலினை இத்துடன் இணைத்து அனுப்பலாகிறது.

இப்பட்டியலில் உள்ள ஆசிரியரல்லாத பணியாளர்கள் விவரங்களை கீழ்க்குறிப்பிட்டுள்ள குறிப்புகளின்படி ஒருமுறை சரிபார்த்து அனுப்பிடவும் 01.01.2024 நிலவரப்படி தகுதி வாய்ந்தவர்கள் இருப்பின் அவர்களை சேர்த்திடவும் கருத்துருக்கள் அனுப்புமாறு ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர், மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை/ தொடக்கக்கல்வி/ தனியார் பள்ளிகள்) மற்றும் அனைத்து அரசு உயர்/ மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

1. அரசாணை(நிலை) எண்.13, பள்ளிக் கல்வித்துறை, நாள்.30.01.2020இல் குறிப்பிட்டுள்ள கலையாசிரியர் பதவிக்கான கல்வித் தகுதியினை பெற்றுள்ள ஆசிரியரல்லாத பணியாளர்களின் பெயர்கள் மட்டுமே பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும்.
2. இளங்கலை பட்டத்தில் இரட்டைப்படிப்பு (Double Degree) படித்தவர்களின் பெயர்கள் சேர்க்கப்படக்கூடாது.
3. அலகுவிட்டு அலகு மாறுதலில் / வேறு துறையிலிருந்து பள்ளிக் கல்வித் துறைக்கு ஈர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் சார்பாக அவர்கள் பள்ளிக் கல்வித் துறையில் பணியில் சேர்ந்த நாள் அடிப்படையில் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும்.
4. இப்பட்டியலில் இடம் பெற்றுள்ள ஆசிரியரல்லாத பணியாளர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதேனும் நிலுவையில் உள்ளதா என்பதனை மீண்டும் ஒரு முறை கூர்ந்தாய்வு செய்ய வேண்டும்.

மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ள நடைமுறைகளைப் பின்பற்றி தற்காலிக (Temporary) உத்தேச பெயர் பட்டியலில் சேர்க்கை, நீக்கம் மற்றும் திருத்தம் ஏதும் செய்யவேண்டி இருப்பின் அப்பணியாளர்களின் விவரத்தினை velloreceo@gamil.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 21.02.2024க்குள் அனுப்பிவிட்டு, அதன் கையொப்பமிட்ட பிரிதியினை உரிய ஆவணங்களுடன் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது. மேலும் உத்தேச பட்டியலில் சேர்க்கை நீக்கம் மற்றும் திருத்தம் ஏதும் இல்லை எனில் இன்மையறிக்கை அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இப்பட்டியலில் விதிகளுக்கு முரணாக பெயர் சேர்க்க பரிந்துரைத்தாலோ அல்லது பெயர் விடுபட்டதாக தெரிவித்து எந்த ஆசிரியரிடமிருந்து முறையீடு ஏதும் பின்னர் பெறப்பட்டாலோ அதற்கு சம்பந்தப்பட்ட தலைமையாசிரியர் மற்றும் சார்ந்த அலுவலரே முழு பொறுப்பு ஏற்க நேரிடும் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு: படிவம்

//ஒப்பம் //
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர் – 9.

பெறுநர்,
1.தலைமையாசிரியர்
அரசு உயர்/மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.
2. கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி
வேலூர் மாவட்டம்
3. மாவட்டக் கல்வி அலுவலர்கள்
(இடைநிலை/ தொடக்கக்கல்வி/ தனியார் பள்ளிகள்)
வேலூர் மாவட்டம்